**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No.140/2025** |
| Deposition of witness | : | P.W.1 |
| Name | : | ஜெயராஜ் |
| Father's /Husband Name | : | பிச்சையா |
| Village | : | வேளாங்கண்ணி |
| Taluk | : | கீழ்வேளூர் |
| Age | : | 65 |
| Occupation | : | வியாபாரம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 04th day of November 2025.
Accused present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது வேளாங்கண்ணியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது நிலத்திற்கு அருகில் வசித்து வருகிறார். கடந்த 02.06.2025 ம் தேதி காலை 11.30 மணியளவில் நானும், சேவியர் என்னுடைய ஓட்டுநர் வைரவநாதன் மற்றும் இங்கர்சால் ஆகியோருடன் காப்பணாமங்கலத்தில் உள்ள எனக்கு பூர்வீக சொந்தமான புல எண்.90/10 வயலுக்கு சென்றேன். நான் அந்த வயலில் எள், உளுந்து தெளித்திருந்தேன். அதற்கு வேலி கட்டுவதற்காக சென்றிருந்தேன். அப்போது சவேரியார் கோவில் தெருவைச் சேர்ந்த ஆஜர் எதிரி பாபு என்பவர் அங்கு வந்து இங்கு எங்கடா வந்த தேவிடியா மகனே குச்சிகாரி மகனே என்று திட்டி கொலை செய்து புதைத்து விடுவேண்டா என்று மிரட்டி இந்த நிலத்தை எழுதி கொடு என்று கேட்டார். நான் அவரிடம் நான் எதற்கு உனக்கு எழுதி கொடுக்க வேண்டும் என்று கேட்டேன். அப்போது எனது புரடியில் கையை வைத்து என்னை கீழே தள்ளிவிட்டார். அப்போது அங்கிருந்த வைரவநாதன்,இங்கர்சால் மற்றும் சேவியர் மூன்று பேரையும் ஆஜர் எதிரி கெட்ட வார்த்தைகளால் திட்டினார். இது சம்மந்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டி குடவாசல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் மனு நான் கொடுத்ததுதான். அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் கொடுத்த புகாரில் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

ஆஜர் எதிரியின் தாயாரிடம் நான் கடந்த 2005 ம் வருடம் புல எண்.90/10 குறித்து கிரய உடன்படிக்கை செய்து கொண்டேன் என்றால் இல்லை. இது தொடர்பாக ஆஜர் எதிரி மீது திருவாரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு எண். 86/2020 என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். IA.141/2020 என்ற மனுவில் எதிரிக்குத்தான் புல எண்.90/10 ல் உரிமை உள்ளது என்று நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது என்றால் இல்லை. அவ்வாறு பிறப்பிக்கவில்லை. அந்த உத்தரவினை எதிர்த்து திருவாரூர் சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து அந்த மேல்முறையீடும் தள்ளுபடி செய்யப்பட்டு எதிரியிடம் தான் அனுபவம் உள்ளது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் புகாரினை கையால் எழுதி கொடுத்தேன் என்றால் சரிதான். எனக்கு எழுத படிக்கத் தெரியுமா என்றால் தெரியும். புகாரினை நான் எழுதினேனா என்றால் எனது இங்கர்சால் எழுதினார். புகாரை இங்கர்சால் எழுதினார் என்று எனது போலீசார் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் உளுந்து சாகுபடி செய்யவில்லை என்றாலும் ஆஜர் எதிரியின் தாயார் தான் சாகுபடி செய்து வருகிறார் என்றாலும் சரியல்ல. மேற்படி வழக்கில் எனக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டு அதனை எதிர்த்து எதிரி திருவாரூர் மாவட்ட நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்த காரணத்தினால் அவரை பழி வாங்க வேண்டும் என்ற நோக்கத்தில் நானும் எனது நண்பர்களும் சம்பவயித்திற்கு செல்லாமலே சம்பவம் நடந்ததாக தவறாக புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஆளும் கட்சியில் இருப்பதால் எனது அதிகாரத்தை பயன்படுத்தி எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.11.04 10:32:44 +05'30'

`

District Munsif-Cum-
Judicial Magistrate,
Kodavasal.